All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

වර්ෂ අවසාන ඇගයීම
ஆண்டிறுதி மதிப்பீடு - 2018
**Year End Evaluation**

| | | | |
|---|---|---|---|
| ශ්‍රේණිය / தரம் / Grade: 06 | විෂයය / பாடம் / Subject: கணிதம் | පත්‍රය / வினாத்தாள் / Paper: I ,II | කාලය / காலம் / Time: 02 மணி. |

பெயர் : ........................................................ சுட்டிலக்கம் : ........................

- எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடையளிக்க.
- ஒவ்வொரு வினாவுக்கும் தலா 02 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

## பகுதி I

01. எண்ணொன்றில் ஒன்றின் இடப்பெறுமானத்தில் இலக்கமொன்று பெறக்கூடிய அதிகூடிய பெறுமானத்தைத் தெரிக.
(i) 10 (ii) 1 (iii) 9 (iv) 90

02. 25 ஐ 3 ஆல் வகுக்கும் போது பெறப்படும்
(i) ஈவு யாது?
(ii) மீதி எவ்வளவு?

03. பாடசாலை ஒன்றில் மு.ப. 7.45 றகு உடற்பயிற்சி ஆரம்பித்து மு.ப. 8.06 இற்கு முடிவடைந்தது எனின், உடற்பயிற்சி இடம் பெற்ற காலம் எவ்வளவு?

04. எண்ணொன்றை கிட்டிய 10 ற்கு மட்டந்தட்டும் போது பெறப்பட்ட எண் 90 ஆகுமாறு அமையக்கூடிய மிகச் சிறிய எண்ணைக் காண்க.

05. படத்திலுள்ள தரவுகளைக் கொண்டு இடைவெளிகளை நிரப்புக.
நேர்கோணம் ....................................... இனாலும்
விரிகோணம் ....................................... இனாலும்
காட்டப்பட்டுள்ளது.




H.D.Fasmin B.Sc (Hons)



Scanned by CamScanner

06. உருவில் A யிற்கு கிடையாக உள்ள புள்ளியை X எனவும், நிலைக்குத்தாக உள்ள புள்ளியை Y எனவும் வெற்றுக் கூண்டில் குறிக்க.




07. சுருக்குக. $\frac{1}{5} - \frac{1}{10}$

08. கீழே தரப்பட்ட தொடர்புகளில் சரியான தொடர்புக்கு எதிரே சரி (✓) என அடையாளமிடுக.

(a) -4 > -6 ☐

(b) 7 < -9 ☐

(c) 0 > - 7 ☐

(d) -5 = 5 ☐

09. 2, 3, 4, 5, 6, 7, 8, 9 எனும் இலக்கங்களை பொதுப் பண்புகளின் அடிப்படையில் இரு கூட்டங்களாகப் பிரித்து அவற்றை தரப்பட்ட உருக்களில் எழுதி அவற்றிற்கான பெயர்களையும் எழுதுக.



.................................................... ....................................................

10. 3, 4 ஆகிய இரு எண்களினதும் பொது மடங்குகள் இரண்டினை எழுதுக.

11. தரப்பட்ட உருவில் காணப்படும் நாற்பக்கல்கள் இரண்டின் பெயர்களை எழுதுக.



12. 50 இற்கும் 100 இற்கும் இடைப்பட்ட சதுர எண்களை எழுதுக.



H.D.Fasmin B.Sc (Hons)

Scanned by CamScanner

13. பாத்திரமொன்றில் 3 $l$ நீர் உள்ளது. அப்பாத்திரத்தில் காணப்படும் துளையொன்றின் காரணமாக 10 நிமிடங்களில் 150 $ml$ நீர் வெளியேறியது. தற்போது பாத்திரத்தில் எஞ்சியுள்ள நீரின் அளவைக் காண்க.

14. நான்முகி ஒன்றில் காணப்படும்

(i) முகங்களின் எண்ணிக்கை யாது?

(ii) விளிம்புகளின் எண்ணிக்கை யாது?

15. 36 : 8 எனும் விகிதத்தை எளிய விகிதமாகத் தருக.

16. (i) $2 \times 2 \times 3 \times 3 \times 3$ சுட்டி வடிவில் எழுதுக.

(ii) $2^3 \times 5^2$ இன் பெறுமானம் காண்க.

17. சிறிய சதுரமொன்றின் பரப்பளவு $1 cm^2$ ஆயின், உருவின் பரப்பளவைக் காண்க.



18. $x = 4$ எனின்,

(i) $15 + x$

(ii) $13 - x$

என்பவற்றின் பெறுமானம் காண்க.

19. தரப்பட்ட உருவில் காணப்படும் வட்டங்களின் எண்ணிக்கையைக் காண்க.



20. வெற்றுக் கூண்டிற்குப் பொருத்தமான பெறுமதிகளை எழுதுக.

| kg | g | | |
|---|---|---|---|
| 6 | 0 | 2 | 5 |
| - ☐ | ☐ | ☐ | ☐ |
| 3 | 7 | 7 | 5 |

H.D.Fasmin B.Sc (Hons)



Scanned by CamScanner

## பகுதி II

- முதலாம் வினாவிற்கும் ஏனைய நான்கு வினாக்களுக்கும் விடையளிக்க.
- முதலாம் வினாவிற்கு 16 புள்ளிகளும் ஏனைய வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 11 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

01. கணித பாட ஆசிரியரின் வழிகாட்டலின் கீழ் நீர் மேற்கொண்ட "நீளம் அளத்தல்" தொடர்பான செயற்பாட்டை நினைவு கூர்க. மாணவர் ஒருவர் நீளம் அளத்தல் தொடர்பாக பெற்றுக் கொண்ட தரவுகள் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| அளக்கப்பட்ட பொருள் | நீளம் |
|---|---|
| மாணவர் மேசையின் நீளம் | 62 cm |
| ஆசிரியர் மேசையின் நீளம் | 1.05 m |
| வகுப்பறையின் நீளம் | 12 m 15 cm |
| படிக்கட்டின் உயரம் | 13 cm 2 mm |

(i) வகுப்பறையின் நீளம் அளப்பதற்குப் பொருத்தமான உபகரணம் யாது?
(ii) இவ் வகுப்பறையின் நீளத்தை சென்றி மீற்றரில் காண்க.
(iii) ஆசிரியர் மேசையின் நீளத்தை மீற்றர் சென்றி மீற்றரில் காண்க.
(iv) படிக்கட்டின் உயரத்தை மில்லி மீற்றரில் காண்க.
(v) மாணவர் மேசையினதும் ஆசிரியர் மேசையினதும் நீளங்களின் கூட்டுத் தொகையைக் காண்க.
(vi) படிக்கட்டின் உயரத்தை விட மாணவர் மேசையின் நீளம் எவ்வளவு கூடியது?
(vii) வகுப்பறையின் அகலம் 6 m 90 cm ஆகக் காணப்படின் வகுப்பறையின் சுற்றளவைக் காண்க.
(viii) மாணவர் மேசைகள் ஐந்தினை ஒரே வரிசையில் அடுக்கி வைத்திருப்பின் அவற்றின் மொத்த நீளத்தை கிட்டிய மீற்றரில் காண்க.

02. (a) (i) 1, 42 ஐ தவிர்ந்த 42 இன் காரணிகள் மூன்றினைக் குறிப்பிடுக.
(ii) பென்சில் ஒன்றின் விலை ரூ.12.00 ஆகும். அவ்வாறான 12 பென்சில்களின் விலையைக் காண்க.
(iii) 345 ☐ என்பது நான்கிலக்க எண்ணாகும். இவ்வெண்ணானது ஐந்தால் மிகுதியின்றி வகுபட வெற்றுக் கூண்டுக்கு இடவேண்டிய பொருத்தமான இலக்கங்களை எழுதுக.

(b) பெறுமானம் காண்க.

(i)
```
   13 . 65
+   3 . 98
__________
==========
```

(ii)
```
   70 . 01
-  19 . 99
__________
==========
```

03. (a) (i) "இரட்டை எண் + இரட்டை எண்" என்பதனால் எப்போதும் எவ்வகையான எண் கிடைக்கும்?
(ii) "ஒற்றை எண் x ஒற்றை எண்" என்பதனால் எப்போதும் கிடைக்கப்பெறுவது எவ்வகையான எண்ணாகும்?
(iii) 9 இற்கும் 18 இற்கும் இடையிலுள்ள முக்கோண எண்கள் யாவற்றையும் தருக.
(iv) இரட்டை முதன்மை எண் யாது?
(v) 0, 1, 2, 4 ஆகிய இலக்கங்களை ஒரு தடவை மாத்திரம் பயன்படுத்தி உருவாக்கக் கூடிய மிகப் பெரிய ஒற்றை எண் யாது?

H.D.Fasmin BSc (Hons)



Scanned by CamScanner

(b) கொய்யாப்பழம் ஒன்றின் விலை ரூ. $x$ உம், மாம்பழம் ஒன்றின் விலை ரூ.40 உம் ஆகும்.

(i) கொய்யாப்பழம் ஒன்றையும் மாம்பழம் ஒன்றையும் வாங்குவதற்கான மொத்த செலவை $x$ இலான கோவையாக எழுதுக.

(ii) கொய்யப்பழமொன்றின் விலை ரூ. 15 ஆயின், மேலே கோவையின் பெறுமானம் காண்க.

04. தேங்காய் வியாபாரியான சிவாவின் கடையில் ஒரு வாரத்தில் விற்பனை செய்யப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கை தொடர்பான தரவுகள் கீழே படவரைபில் தரப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| திங்கள் | ● ● ● ● ● ● |
| செவ்வாய் | ● ● ● ◖ |
| புதன் | ● ● ● ● |
| வியாழன் | ● ● ● ● ◖ |
| வெள்ளி | ● ● ● ● |
| சனி | |
| ஞாயிறு | |

● 10 தேங்காய்களின் எண்ணிக்கையைக் குறிக்கின்றது.

(i) மேலே பட வரைபின் அடிப்படையில் கூடுதலான தேங்காய்கள் விற்பனை செய்யப்பட்ட நாள் எது?

(ii) புதன்கிழமை விற்பனை செய்யப்பட்ட தேங்காய்கள் எத்தனை?

(iii) சமனான எண்ணிக்கையிலான தேங்காய்கள் விற்பனை செய்யப்பட்டது எத்தினங்களில்?

(iv) சனிக்கிழமை 20 தேங்காய்களும், ஞாயிற்றுக்கிழமை 15 தேங்காய்களும் விற்பனை செய்யப்பட்டிருப்பின் அவற்றை மேலே படவரைபில் குறித்துக் காட்டுக.

(v) இந்த வாரத்தில் 7 நாட்களிலும் விற்பனை செய்யப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கை யாது?

(vi) தேங்காய் ஒன்றின் விலை ரூ. 60 எனின், இந்த வாரத்தில் தேங்காய்களின் விற்பனையால் பெறப்பட்ட தொகையைக் காண்க.

05. கூண்டிற்குள் தரப்பட்ட பின்னங்கள், தசமங்கள் என்பவற்றிலிருந்து,

| | | |
|---|---|---|
| $\frac{1}{2}$ | $\frac{3}{8}$ | $\frac{2}{5}$ |
| $\frac{1}{4}$ | $\frac{13}{7}$ | 0.03 |
| 0.3 | 4 | $\frac{4}{10}$ |
| $\frac{5}{8}$ | $\frac{3}{8}$ | 1.5 |

(i) அலகுப் பின்னங்கள் இரண்டு தருக.

(ii) 0.5 ஐ பின்னத்தில் எழுதுக.

(iii) $\frac{2}{5}$ இன் சமவலுப் பின்னத்தை தெரிந்து எழுதுக.

(iv) $\frac{3}{10}$ ஐ தசம எண்ணாகத் தருக.

(v) கூண்டிற்குள் உள்ள தசம எண்களை " > " எனும் குறியீட்டைப் பயன்படுத்தி இறங்கு வரிசைப்படுத்தி எழுதுக.

(vi) $\frac{1}{12}+\frac{1}{6}+\frac{1}{3}$ இன் பெறுமானம் காண்க.

H.D.Fasmin B.sc (Hons)



Scanned by CamScanner

06. (a) பாடசாலை ஒன்றின் பிரதான இடங்கள் சிலவற்றின் அமைவுகளை உரு காட்டுகிறது. உருவிலுள்ள தகவல்களின் அடிப்படையில் கீழுள்ள வினாக்களுக்கு விடையளிக்க.




(i) நுழைவாயில் அமைந்திருப்பது கோயிலுக்கு எந்த மூலையிலாகும்?

(ii) பிரதான மண்டபத்திற்கு கிழக்கு திசையில் அமைந்திருப்பது என்ன?

(iii) கிணறு அமைந்திருப்பது வாசிக சாலைக்கு எத்திசையிலாகும்?

(iv) மாணவன் ஒருவன் மைதானத்தில் நின்று ஆய்வுகூடத்தை நோக்கி பார்க்கும் போது அவனது இடது கை எத்திசையை நோக்கி இருக்கும்?

(b)




எண்கோட்டில், (i) P குறிக்கும் பெறுமானம் யாது?

(ii) Q குறிக்கும் பெறுமானம் யாது?

(iii) P, Q வை ">" எனும் குறியீடு மூலம் காட்டுக.

07. (i) 6533172 எனும் எண்ணை வலயங்களாக வேறுபடுத்தி எழுதுக.

(ii) இவ்வெண்ணை வாசிக்கும் முறையை எழுதுக.

(iii) மேலே எண்ணில் இலக்கம் 1 குறிக்கும் பெறுமானம் யாது?

(iv) 1.23 ஐ எண் சட்டமொன்றில் குறித்துக் காட்டுக.

(v) $4^3$ , $3^4$ என்பவற்றில் மிகப் பெரிய எண் யாது?

H.D.Fasmin B.Sc (Hons)

Scanned by CamScanner